திருக்கிற வகையில் இன்று இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தத்து எடுத்துக்கொண்ட தர்மபுரி மாவட்டம் அமைந்திருக்கின்ற காரணத்தினால், இந்த இயற்கை மருத்துவக் கல்லூரியை மற்ற இடங்களிலே அமைப்பதைவிட தர்மபுரி மாவட்டத்திலே, அத்தனை கல்லூரிகளையும் வழங்கிய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றிகூறும் முகத்தான், இக்கல்லூரியையும் அமைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புறேன்.

முற்பகல் 10–35

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தட்பவெட்ப நிலை இந்தக் கல்லூரிக்கு அவசியமானதா என்று எனக்குத் தெரியவில்லை. ஒவ்வொரு ஊரிலேயும் இருக்கின்ற தட்பவெட்ப நிலையைப் பற்றிச் சொன்னார்கள். ஒரே ஊரிலே இந்தமாதிரி நிலை இருக்கிறதா என்றால் இல்லை. எனவே, இதற்கு இப்பொழுது தேவையே அடிப்படை வசதி. அந்த அடிப்படை வசதி ஏற்கனவே பாளையங்கோட்டையிலே இருக்கின்ற காரணத்தினால் செலவு இல்லாமல், அரசாங்கத்திற்கு இருக்கின்ற நிதிப் பிரச்சினைக்கு இடையிலே சுமையை ஏற்றாமல், இந்தக் காரியத்தைச் செய்ய முடியும் என்பதற்காகச் சொல்லப்பட்டதேயொழிய, தனியாக தர்மபுரி மாவட்டத்திலே அக்கல்லூரியை அமைப்பதற்கான வாய்ப்பு இல்லை. மேலும் மாணவர்கள் படிப்பதற்காகச் செல்லுகிறார்கள். நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்கின்றபொழுது, அவர்களுக்கு எந்தவிதமான இடத்தில் சிகிச்சை அளித்தால் நன்றாக இருக்கும் என்று கருதுகிறார்களோ, அந்த இடத்தை மருத்துவர்கள் தேடிக்கொள்வார்கள். எனவே படிக்க வைப்பதற்காக அனுப்புகிற அமைக்கப்படுகிற இடத்தைப் பற்றி மட்டும்தான் நாம் யோசித்துக் கொண்டு இருக்கின்றோம். எனவே, பாளையங்கோட்டையிலே அந்த வசதி இருக்கின்ற காரணத்தினால் அங்கே வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 7, திரு. செ.து. வரதராஜன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

7—

அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களிலும் சமூகக் கூடங்கள் அமைத்தல்.

*16440—திரு. செ. து. வரதராஜன் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் : கீழ்க்கா ணு வினாவுக்கு விடையளிப்பாரா—

1993 அக்டோபர் 26]

அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களிலும் சமூகக் கூடங்கள் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத் துறை அமைச்சர், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பரிசீலனையில் உள்ளது.

திரு. செ. து. வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கத் தலைவி, புரட்சித் தலைவியி னுடைய ஆட்சியில் போக்குவரத்துக் கழகங்கள் செம்மையாகவும் சிறப்பாகவும் நடைபெறுகின்றது. போக்குவரத்துக் கழ கங்கள் பல சமூகப் பணிகளை ஆற்றிக் கொண்டிருக்கின்றன. ஆகவே இந்த சமூகக் கூடங்களைக் கட்டுவதனால் ஏழை யெளிய மக்களுக்கும், போக்குவரத்துக் கழகங்களின் பணியாளர் களுக்கும் உதவியாக இருக்கும். ஆகவே, அரசு இதை சீக்கிரம் பரிசிலித்து முடிவு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லவன் போக்குவரத்துக் கழகம், பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம், தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம், ஆகியவற்றில் சமூக நலக் கூடங்கள் கட்டி முடிக்கப்பட்டு இருக்கின்றன. சமூக நலக் கூடங்கள் கட்டுவதற்கு, இராணி மங்கம்மாள் போக்கு வரத்துக் கழகம், அண்ணா போக்குவரத்துக் கழகம், பாண்டியன் போக்குவரத்துக் கழகம், மருது பாண்டியன் போக்குவரத்துக் கழகம், தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகம், சேரன் போக்குவரத்துக் கழகம், திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் ஆகியவற்றில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

திரு. செ. து. வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம், மற்றும் தங்கத் தலைவர் புரட்சித் தலைவருடைய போக்குவரத்துக் கழகத்திலும், இதுபோன்று சமூகக் கூடங்கள் கட்டுவதற்கு ஆவன செய்யப்படுமா என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி வசதிக்கேற்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 8, டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.